செங்கோல்

சென்னை 6—1—52 ஞாயிறு

ஆந்திரர் ஆர்ப்பாட்டம்

ஒரு லட்சியத்தை அடைய முழு மூச்சுடன் பாடுபடுவது பெரிதல்ல. காலம் அறிந்து, சந்தர்ப்பம் உணர்ந்து யாருக்கும் சிறு இன்னல்கூட தராத நிலையில் லட்சியத்தின் எல்லையை எட்டிப்பிடிப்பது தான் பண்புள்ளோர் செயல். 'தடியெடுத்தவன் தண்டல்காரன்' என்ற முறையில் பலாத்காரத்தைப் பிரயோகித்து ரத்த களரியை உண்டாக்கி தேவையின்றி பலரை பலி கொடுத்துதான் லட்சியத்தை அடைய முடியும் என்று நம்புபவர்களைப் பற்றி நமக்குக் கவலையில்லை. ஒரு சொட்டு ரத்தம் கூட சிந்தாது நமக்கு சுதந்திரம் வாங்கி தந்த காந்தியடிகளின் தத்துவத்திலே நம்பிக்கை கொண்ட நாம்—அராஜகத்தை அறவே வெறுக்கும் நாம், நமது லட்சியத்தை அடைய அவசரமோ, ஆத்திரமோ கொள்வது அர்த்தமற்ற செயலே.

மொழிவாரி மாகாணப் பிரிவினை சம்பந்தமாக காங்கிரஸ் எப்பொழுதுமே மாறுபட்ட அபிப்பிராயம் கொண்டதில்லை. காங்கிரஸின் நிர்வாகஅமைப்பே மொழிவாரி அடிப்படையில் அமைந்திருப்பது குறிப்பிடத்தக்கது.

1919-ம் ஆண்டுக்கு முன்னர் சிறு வட்டாரங்களாக பிரிக்கப்பட்டு இயங்கி வந்த காங்கிரஸ் சபையின் நிர்வாக முறை 1919 க்குப் பின்னர் மொழிவாரி நாடுகளாக திருத்தி அமைக்கப்பட்டது. அதுவரை சென்னை மாகாணம் முழுவதற்கும் ஒரே காங்கிரஸ் கமிட்டிதான் இருந்தது. 1920-க்குப் பிறகு தமிழகம், ஆந்திரம், கேரளம், கன்னடம் போன்ற மொழிவழி நாடுகட்கு தனித்தனி கமிட்டிகள் அமைக்கப்பட்டன. அந்தந்த மாகாண மொழியிலேயே ஆங்காங்கு காங்கிரஸ் பிரச்சாரம் நடத்தப்படவேண்டும் என்றும் மாகாண தலைவர்கள் தாய்மொழியில் பயிற்சி பெற்றவர்களாக இருந்தாலே போதுமென்றும் மகாசபை தீர்மானித்தது. சொல்லப்போனல் இந்தியாவை மொழிவாரியாக பிரிக்க வேண்டும் என்ற உணர்ச்சியை நமக்கு உண்டாக்கியதே காங்கிரஸ் சபையாகும்.

1936-லும், 194[illegible]-லும் [illegible]கிரஸ் மகாசபை வெளி[illegible] பிரகடனங்களிலும் இந்த மொழிவாரி மாகாண பிரச்னையை நன்ருக வலியுறுத்திக் கூறியிருக்கிறது. இன்றைய காங்கிரஸின் தேர்தல் பிரகடனத்திலும் இந்த அடிப்படை ஒரு முக்கிய பகுதியாக இருக்கிறது.

இவ்வளவுதூரம் தன் நிலையை தெளிவாக்கி வைத்திருக்கும் காங்கிரஸ் மகாசபையிடம் அடிக்கடி சந்தேகப் படுவதும்—அவசரப்பட்டு அதிருப்திக் குரல் எழுப்புவதும் இந்நேரத்தில் சரியான செயலல்ல.

காங்கிரஸ் இன்று பயங்கரமான ஒரு சூழ்நிலையைஎதிர்த்து நிற்க வேண்டிய நிர்பந்தத்தில் இருக்கிறது. பத்துமாதம் சுமந்து பெற்ற தாயிடமிருந்து பச்சிளம் குழந்தையைப் பிடுங்கி பராமரிக்கப் போவதாக பறைசாற்றுகின்றன சில பிற்போக்கு கும்பல்கள். தாயின் பாசத்துடனும் மன வேதனையுடனும் இன்று போராடுகிறது காங்கிரஸ். கர்ப்பமாக இருந்தபோது அளித்த வாக்குறுதிகளை காங்கிரஸ் தாய் மறந்து விடவில்லை. ஆனல், குழந்தையே பறிபோகும் நிலையில் இருக்கும்போது குழந்தையைக் காப்பாற்ற வேண்டியது முதல் பிரச்னையே தவிர வாக்குறுதிகளைப் பற்றி சிந்திப்பதல்ல......

பொது எதிரியான அன்னிய ஆட்சியை ஒழிப்பதற்காக நமது உரிமைகளைப் பற்றி சிந்தனை செய்யாமல் அன்று நாம் காங்கிரசுடன் ஒத்துழைத்தோம். இன்றும் அதே மாதிரியான ஒரு சோதனைக் காலம் வந்திருக்கிறது. காங்கிரஸையே அழித்து நிர்மூலமாக்கிவிட கங்கணம்கட்டி எழுந்திருக்கின்றன சில பிற்போக்கு கும்பல்கள். காங்கிரஸ் அழிக்கப்பட்டால் "மொழிவாரி மாகாணம்" என்று சொல்லவே நமக்கு உரிமை இருக்க முடியாது! நமது லட்சியம் மொழிவாரி மாகணம் என்பது உண்மையானல் இன்று முதலில் காங்கிர[illegible] காப்பாற்றியாக வேண்டும். [illegible]ங்கிரஸ் காப்பாற்றப்பட வேண்டுமானல் நமது லட்சிய கோஷங்களை கொஞ்ச நேரம் ஒதுக்கி வைத்துவிட்டு தேர்தலில் காங்கிரஸ் வெற்றி பெற முழு மூச்சாக உழைக்க வேண்டும். தேர்தல் முடியும் வரை நமது தாய்நாட்டு உணர்ச்சியை ச[illegible]று அடக்கித்தான் வைத்திருக்க வேண்டும்.

சமீபத்தில் தேர்தல் பிரசாரத்திற்காக ஆந்திர நாட்டுக்கு பண்டித நேரு வந்தபோது சிலர் ஆந்திர பிரிவினைப் பிரச்னையை எழுப்பிக் கூச்சல் போட்டு கலாட்டா செய்தார்களாம். இப்படி சந்தர்ப்பம் தெரியாமல் தவறு செய்யும் கூட்டத்துக்கு பதலளிக்கையில் திரு. நேரு மாகாண வெறியைக் கண்டித்தாராம். உடனே ஆந்திர சாமியார் சீதாராம் வெகுண்டெழுந்து சத்தியாக்கிரகம் செய்யப் போவதாக சூளுரை புகலத் தொடங்கி விட்டார்.

திரு. நேரு மாகாண வெறியைத்தான் கண்டித்தாரே தவிர மாகாண உணர்ச்சியை அல்ல. இந்த உண்மை புரியாமல் சுவாமியவர்கள் [illegible] செய்ய நினைப்பது கா[illegible]ஸின் [illegible]கில் குத்துவதுபோலாகும்.

மொழிவாரி மாகாணப் பிரிவினை சம்பந்தமாக தமிழர்களுடைய உணர்ச்சி ஆந்திர[illegible]க்கு எவ்வகையிலும் [illegible]ததல்ல. ஆனல் பித்த ஜன்னிக்கா[illegible] மாதிரி கண்டபடியெல்லாம் தாவிக் குதித்து பிறகு ஓய்ந்து போய்விடுவது தமிழரின் பண்பல்ல; காலமறிந்து போர்களத்

★ முச்சந்தி ★

★ சண்முகம் ★

புரட்சிக் கவிஞர்

"புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் இதுவரை ஏதாவது புரட்சி செய்திருக்கிறாரா?" என்று ஒரு நண்பர் கடிதம் எழுதிக் கேட்டிருக்கிறார்.

பெயர் வைத்துக்கொண்டால் செயலிலும் அப்படித்தான் இருந்தாகவேண்டும் என்ற கட்டாயம் யாரால் எப்பொழுது ஏற்படுத்தப் பட்டது?

அப்படிப் பார்த்தால் பல இடங்களில் 'அறிஞர்கள்' பட்டம் வாபஸாக வேண்டியிருக்குமே!

'நகைச்சுவை மன்னன்' என்றால் அவருக்கு எப்பொழுது பட்டாபிஷேகம் நடந்தது? பட்டமகிஷி யார்? குடிகள் ஆறிலொரு கடமை செலுத்துகிறார்களா? அந்த மன்னரின் ஆட்சியில் மாதம் மும்மாரி பெய்கிறதா? ஆலய பூசைகள் சரிவர நடைபெறுகின்றனவா?......... 'என்றெல்லாம் நண்பர் கேட்டு விடுவார் போலிருக்கே...!

'சுந்தரி' என்று ஒரு பெண்ணிற்கு பெயர் இருந்தால் அவள் அழகாகத்தான் இருந்தாக வேண்டும் என்று எதிர்பார்த்தால் அது நடக்கிற காரியமா?

பாவம், புரியாத மனிதர்! புரியாத்தனமாக கேள்வி கேட்டு விட்டார்.

இப்படிச் சொல்வதிலிருந்து பாரதிதாசனை நான் புரட்சிக் கவிஞர் என்று ஒப்புக்கொள்ள மறுப்பதாக யாராவது நினைத்துக்கொண்டால் அதை வன்மையாக எதிர்க்கிறேன்.

அவர் எத்தனையோ புரட்சிகள் செய்திருக்கிறார். மாதிரி தேவையா...?

"எங்கெங்கு காணினும் சக்தியடா..." என்று காளி மீது பாட்டு...

பிறகு புரட்சி...! சாமியாவது பூதமாவது. பெரியார் ஈ. வெ. ரா. வாழ்க...!

மீண்டும் புரட்சி...!! பெரியாராவது மண்ணாங்கட்டியாவது... ஊரை ஏமாற்றி சுருட்டல் பண்ணுவதுதான் பெரியார் தன்மையா? அறிஞர் அண்ணா வாழ்க! அவர்தான் உண்மைத் தமிழ் வீரன்...

மறுபடியும் புரட்சி...!!! ராமசாமி ஈரோட்டுக்கு மூட்டை கட்டுகிறார். அண்ணாத்துரை காஞ்சிபுரத்துக்கு வண்டி வண்டியாக ஏற்றுகிறார்... இரண்டுபேரும் ஊரை ஏமாற்றுபவர்கள்......

புரட்சி வரடை போதாதா? கேள்வி கேட்ட நண்பருக்கு சந்தேகம் தெளிந்திருக்குமென்று நம்புகிறேன்.

நாமத்தை அழித்த நாக்கால்...!

பழனியிலும், காஞ்சிபுரத்திலும் இளைஞர்கள் சிலர் 'செங்கோலி'ல் வெளிவந்திருக்கும்பயனுள்ள விஷயங்கள சிலவற்றை துண்டுப் பிரசுரங்களாக வெளியிட்டு வினியோகித்தார்களாம். இதைக்கண்டு தி. க., தி. மு. க. தோழர்கள் சீறுகிறார்களாம்... காஞ்சிபுரத்தில் தி. மு. க. தோழர்களின் மானத்தை வாங்கும் (ஆபாசமற்ற) கோஷங்கள் எழுத்து உருவத்தில் தார் ரோடுகளில் கண்களைப் பறித்தனவாம். தி. மு. க. இளவெட்டுகள் உடனே சாணமிட்டு எழுத்துக்களை அழிக்க முயற்சித்தார்களாம். பூரணமாக அழியாததால் வேறு எப்படி அழிப்பது என்று புரியாமல் தீவிரமாக ஆலோசனை செய்கிறார்களாம்...

மேற்கண்ட செய்தி குறிப்பிடப்பட்டு வந்திருந்த கடிதத்தை நான் படித்துக் கொண்டிருந்த போது பின்புறமாக வந்த காரியாலய பையன் கடிதத்தை பார்த்து விட்டான். மெதுவாக முன்னால் வந்து குழைந்து கொண்டு நின்றான்.

"என்னடா?" என்றேன்.

"ஆச்சரியமாக் இருக்கு..." என்றான பையன்.

"என்னடா ஆச்சரியம்?"

"எத்தனையோ இடங்களில் நெற்றியிலிருக்கும் நாமத்தை அழிக்க நாக்கை உபயோகித்து பழக்கப்பட்ட அசகாய சூரர்கள்... இந்த சின்ன விஷயத்தில் யோசிப்பதுதான்......

மூச்சே காணோம்!

குத்திக் கிளறுவதையே லட்சியமாகக் கொண்ட கபோதிக் கூட்டத்தைச் சேர்ந்த தினப் பத்திரிக்கையின் அண்டர் கிரவுண்ட் ஆசிரியர் ஒருவர் கொஞ்ச நாட்களுக்கு முன்பு ஒரு அலறல் அலறினார்.

தலைவர் ம. பொ. சி. தேர்தல் பிரசங்கத்துக்காக வெளியே வருவார் என்று எதிர்பார்த்தாராம். அப்படி வந்தால் தமக்கே இயல்பான உறுமல், கத்தல், கதறல், ஊளையிடல் போன்ற பாணங்களை பிரயோகித்து அவரை விரட்டி விடலாம் என்று தீர்மானம் செய்து வைத்திருந்தாராம். வராமல் ஏமாற்றி விட்டாரே... என்று அங்கலாய்த்து எழுதியிருந்தார்.

தலைவர் ம. பொ. சி. இன்று தமிழ் நாடெங்கும் புயல் வேகத்தில் சுற்றுப் பிரயாணம் செய்து வருகிறார் பேசும் ஒவ்வொரு கூட்டத்திலும் இந்த துரோகக் கும்பலின் மண்டையில் சரியானபடி அடி கொடுக்கத் தவறுவதில்லை.

நானும் ஒவ்வொரு நாளும் பார்த்துக் கொண்டுதான் இருக்கிறேன். அந்த அண்டர் கிரவுண்ட் ஆசாமியின் மூச்சே காணோம். 'அண்டர்கிரவுண்டி'லே அப்படியே அமுங்கிப் போய் விட்டாரா? அல்லது, தொண்டை கட்டிக் கொண்டதால் ஊளையிட முடியவில்லையா? அல்லது குத்திக் குத்திப் பார்த்து ஊசியில் ஒன்றும் வராததால் பல சரக்கு மூட்டையை யாராவது ஏமாந்து எங்காவது வைத்திருக்கிறார்களா என்று தேடித் திரிகிறாரா?......

கட்சிகளும் காளான்களும்

ரசம்

இது தேர்தல் காலம். மழை காலத்து காளான்களைப் போல மூலைக்கு மூலை கட்சிகளும், இயக்கங்களும் இன்று நாட்டிலே நடமாடுகின்றன. கட்சி என்ற பெயரை வைத்திருக்கும் ஒவ்வொன்றும் பெரிய, பெரிய லட்சிய கோஷங்களை வானளாவ ஒலிக்கின்றன. வெள்ளையடிக்கப் பட்டிருக்கும் சுவர்களிலெல்லாம் வசவு வார்த்தைகள் மின்னுகின்றன. வண்ண சுவரொட்டிகள் கண்ணைப் பறிக்கின்றன. எங்கள் கட்சியை ஆதரியுங்கள்—அல்லது எங்கள் கட்சிப் பெட்டியில் வோட் போடுங்கள்......" என்று தெருத்தெருவாக சிறு கூட்டங்கள் பவனி வருகின்றன. சாதாரண பாமர மக்களிடமும் அரசியல் பிரச்னைகளும், கட்சிகள் பற்றிய விவாதமும் பிரமாதமாக அடிபடுகின்றன.

பெரும்பாலானவர்கள் தேர்தலுக்கு நிற்கும் தனி மனிதனின் தகுதியை மட்டும் அவர்களை தேர்ந்தெடுப்பதற்கான யோக்கியதாம்சங்களாகக் கருதுகிறார்கள். இது தவறு. எந்தக் கட்சி சார்பில் அபேட்சகர் நிற்கிறார் என்பதே இன்று மக்களின் ஆலோசனைக்கு உரிய முக்கிய விஷயம். கட்சியே இல்லாது சுயேட்சையாக நிற்கும் தனி மனிதர்கள் சமுதாயத்தின் கட்டுப்பாட்டையே அவமரியாதை செய்கிறார்கள். தலைவர் ம. பொ. சி. கூறுவது போல தனி நபர்கள் 'ஸைபர்' என்ற எண்ணுக்குள்ள மதிப்பையுடையவர்களே. ஏதாவது ஒரு கட்சியுடன் தொடர்பு கொண்ட பின்புதான் அவர்கள் பொது நல சேவைக்கு லாயக்குள்ளவர்களாகிறார்கள்.

இன்று தேர்தலுக்கு பல கட்சிகள் போட்டியிடுவதாக அறிவிக்கப் பட்டிருக்கிறது. இவையெல்லாம் கட்சிதானா? இது மக்களின் சிந்தனைக்குரிய கேள்வி.

கட்சி யென்றால் — அதிலும் அரசியல் கட்சியென்றால் என்ன?

தாய்நாட்டின் பொதுவான முன்னேற்றத்தை அடிப்படை லட்சியமாகக் கொண்டு அந்த லட்சியத்தை அடைவதற்கு சில கொள்கை—திட்டங்கள் வகுத்து, அக்கொள்கைகளை வேற்றுமையின்றி கட்டுப்பாடாக பின்பற்றி ஒழுகும் ஒரு குழுவை பொதுவாக அரசியல் கட்சி என்று குறிப்பிடலாம்.

ஒரு கட்சியில் தொடர்பு கொள்ளும் மனிதர்கள் யாருடைய கட்டாயத்தின் பேரிலும் அதைச் செய்வதில்லை. மனப்பூர்வமாகவும், சுதந்திரத்துடனும் தான் அவர்கள் அரசியல் கட்சிகளில் அங்கம் வகிக்க முனைகின்றனர். இப்படி சுதந்திர மனப்பான்மையுடையவர்கள்—சுதந்திரமாக கட்சியில் இணைந்து கட்சியை இயக்குவதால் தான் உலக நாடுகள் எல்லாவற்றிலும் கட்சிகளுக்கு மதிப்பும், செல்வாக்கும் மிகுந்திருக்கிறது.

ஒரு நாட்டில் ஒரு கட்சிதான் இருந்தாக வேண்டுமென்ற நியதியில்லை. சூழ்நிலையை ஒட்டி ஒரே நாட்டில் பல கட்சிகள் ஏற்பட நேரிடலாம். ஆனால், அக்கட்சிகளின் இறுதி நோக்கம் நாட்டின் பொது நன்மையைக் கருதுவதாகவே இருக்க வேண்டும். ஒரு நாட்டின் அரசியல் கட்சி என்று கூறிக்கொண்டு அந்த நாட்டின் மீது பற்றில்லாத கூட்டமோ, நாட்டின் நன்மைக்கு விரோதமான காரியங்களைச் செய்யும் இயக்கமோ கட்சி என்ற பெயருக்கே தகுதியற்றது. அதைக் கட்சி என்று அழைப்பதை விடத் துரோகக் கும்பல் என்று அழைப்பதுதான் பொருத்தமானது.

ஒரு நாட்டின் மக்களுள் மத, இன, வகுப்பு வேறுபாடு கருதாமல் எல்லாருடைய பொது நன்மையையும் கருதும் பண்பு தான் உண்மையான அரசியல் கட்சிக்குரிய இலக்கணமாகும். நாட்டின் ஒரு குறிப்பிட்ட இனத்தார் அல்லது மதத்தினர்—வகுப்பினருடைய நலனை மட்டும் காப்பாற்றும் நோக்கத்துடன் தலையெடுக்கும் கூட்டங்களும் தமிழ் நாட்டில் அரசியல் கட்சிகள் என்று பெயர் சொல்லி உலாவுகின்றன. இவை கட்சியே அல்ல. இந்த வகுப்புவாதக் கூட்டத்தை போலிக் கட்சிகள் என்று வேண்டுமானால் அழைக்கலாம். அரசியல் போர்வையை போர்த்தித் திரியும் இந்தப் போலிகள் நடுக்காட்டில் கழுத்தறுக்கும் அபாயகரமான கூட்டங்கள்; இவற்றிற்கு தங்கள் இனம்—மதம், அல்லது வகுப்பின் நன்மை தான் பெரிது. இந்த நன்மையை சாதிப்பதற்காக இவை சிலசமயங்களில் நாட்டின் பொது நன்மையையும் மறந்து விடுவதல்லாமல் — நாட்டின் மானத்தையே பிற நாட்டிடம் அடகு வைக்கவும் துணிந்து விடும். இத்தகைய போலி கும்பல்கள் பெருத்து விடுமானால் சமுதாயத்தின் ஒழுங்கு முறையே தகர்ந்து விடும். பொதுநலம் மக்களின் மனதை விட்டே ஓடி விடும். எல்லாரும் சுயநலமிகளாக மாறத் தொடங்குவர். அப்புறம் ஆயிரம் ஆண்டுகள் முயன்றாலும் மக்களை நேரான பாதைக்கு அழைத்துவர இயலாமல் போய்விடும். தமிழ்நாட்டில் இம்மாதிரி போலிகளின் தொகை சமீபகாலமாகப் பெருகி வருகிறது என்பதை நினைக்கும் போது தமிழகத்தின் தலைவிதியைப் பற்றி நடுங்கத்தான் வேண்டியிருக்கிறது.

இந்தப் போலிக் கும்பல்களின் கோஷங்கள் மிக கவர்ச்சி

கரமாக இருக்கும். சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம் போன்ற பெரிய பெரிய வார்த்தைகளெல்லாம் அந்தக் குழுவினிடையே சரளமாக அடிபடும். மக்களின் பலஹீனம் எந்தப் பக்கம் திரும்புகிறது என்பதை மட்டும் நன்றாக கவனித்திருந்து மற்ற உண்மையான அரசியல் கட்சிகள் வாய்திறக்கு முன்பு முந்திக் கொண்டு கோஷம் போட்டு மக்களின் கவனத்தைத் தன்பால் திருப்பிக் கொள்வதில் இந்த கூட்டத்துக் அபார சாமர்த்தியம் உண்டு. மக்களுக்கு அரசாங்கத்தின் மீதிருக்கும் கோப தாபங்களை குத்திக் கிளறிவிட்டு மக்கள் மனதில் துவேஷத்தையும் ஆத்திரத்தையும் வளர வைத்து அதன் மூலம் சுய தேவைகளைப் பூர்த்தி செய்துக் கொண்டு இந்த கூட்டங்கள் மறைந்து விடுகின்றன. தங்கள் திருட்டுச் செயல்களைப் புரிந்து கொண்டு எதிர்ப் பிரச்சாரம் செய்ய முயலும் உண்மை அரசியல் கட்சிகளை கொள்கை ரீதியாக எதிர்ப்பதை விட்டு இவை குறுக்கு வழியில் எதிர்க்கத் தொடங்கும். ரௌடிஸத்தின் மூலம் எதிர்க்கட்சிகளை அழிக்க முற்பட்டு விடும். பெரிய பெரிய கோஷக் கூச்சல்களை எழுப்பியும் கலாட்டாக்களையும், ரத்தக் களரியையும் நாட்டில் கிளப்பியும் இவை தங்கள் தவறுகளை மறைத்துவிட முயற்சிஎடுக்கும். இதனால் நாட்டை ஆளும் அரசாங்கமும் செயலற்று திகைக்க நேரிட்டு விடுகிறது. மக்களும் படுமோசமான இன்னல்களுக்கு இலக்காக நேரிடுகிறது. பாமரருக்கு என்ன தெரியும்! மனதில் பொங்கி எழும் கோபத்தை அரசாங்கத்தின் மீது திருப்பி, வாய் நோகும் வரை திட்டித் தீர்த்துவிடுகின்றனர். போலி அரசியல் வாதிகள் மக்களையோ, அரசாங்கத்தையோ, பற்றிக் கவலைப்படாமல் உல்லாச வாழ்வு வாழத் தொடங்குகின்றனர். ஆகவே, எது சரியான அரசியல் கட்சி என்பதை நிர்ணயிப்பதில் மக்கள் அவசரப்படக் கூடாது.

தமிழறிஞர் சாமிநாதசர்மா கூறுவது போல, ஒரு கட்சியானது ஒழுங்குக்கு கட்டுப்பட்டிருக்க வேண்டும்; ஒரே தலைமைக் குட்பட்டிருக்க வேண்டும். எந்த விஷயத்தைப் பற்றியும் உடனுக்குடன முடிவுக்கு வர வேண்டும். இந்த மூன்று அம்சங்களிலும் ஒரு கட்சியும், ஒரு படையும் ஒன்றென்க் கூறுவார்கள் அறிஞர்கள்.

ஒரு கட்சியின் தகுதியை முடிவு செய்ய வேண்டுமாயின் அதன் கடந்த கால சரித்திரத்தைப் புரட்டிப் பார்க்க வேண்டும். அதன் எதிர்கால திட்டங்களை ஆராயவேண்டும். தனக்குப் பின்னால் ஒரு சரித்திரத்தையும், முன்னால் ஒரு லட்சியத்தையும் வைத்திராத எந்தக் குழுவும் கட்சியாக இருக்க முடியாது.

> "...குமரி முதல் வேங்கடம் வரை தமிழகம் அமைய வேண்டுமென்பதே தமிழர் கோரிக்கை. அந்தப் புதிய தமிழகத்தை அடைவதற்குக் குறுக்கே நிற்கும் எவரையும், அவர்கள் எந்த இனத்தவராயினும் அவர்களுக்கும் நமக்கும் உள்ள பண்டைத் தொடர்புகள் எதுவாயினும் அதை பற்றிக் கவலை கொள்ளாது போரிட்டே தீருவோம்."
>
> —'தமிழன் குரலி'ல் ம. பொ. சி.

அறிவாளிகளும், படித்தவர்களும் நிரம்பியிருப்பதாலேயே ஒரு கட்சி சிறப்படைந்துவிட முடியாது. சண்டப் பிரசண்டமாக சொற்பொழிவாற்றுபவர்களைக் கொண்டு மட்டும் ஒரு கட்சியின் தகுதியை அளப்பது கூடாது. கட்சியில் உணர்ச்சியுள்ளவர்கள் நிரம்பியிருக்க வேண்டும். அது வெறும் சக்தியற்ற சபல உணர்ச்சியாக இருந்து பயனில்லை. ஒரு பெரும் போராட்டத்துக் தலை கொடுக்கத் கூடிய வீர உணர்ச்சியாக இருக்க வேண்டும். போராட்டத்தை சமாளிப்பதோடு நில்லாது எதிர்த்து நின்று முன்னேறும் துணிவும் அமைந்திருக்க வேண்டும்.'

போராட்டம் என்றால் கத்தி-துப்பாக்கி-கைத்தடி ஏந்தியாக வேண்டும என்பது கருத்தல்ல. அத்தகைய போராட்டத்தை அரசியல் தொண்டர்கள் செய்ய வேண்டுமென்ற அவசியமில்லை. ஊர் சுற்றித் திரியும் கோவணாண்டி கூட இதைச் செய்து விடுவான். பிறருக்குத் இன்னல் தராத—மனித சமுதாயத்தின் முன்னேற்றத்துக்கு தேக்கம் விளைவிக்காத சாத்மீக போராட்டமே உணமையான அரசியல் போராட்டமாகும். இந்தப் போராட்டத்துக்கு உடல் வலிவை விட மனவலியே அதிகமாகத் தேவைப்படும் இம்மாதிரி மனவலிமையுள்ள வீரர்களின் கூட்டமைப்பே அரசியல் கட்சியின் அடித்தளமாகும்.

ஒரு கட்சியின் பலம் அக்கட்சிக்கு சேர்ந்துள்ள அங்கத்தினர்களின தொகையைப் பொறுத்திருப்பதாக தமிழகத்தில் பலர் நினைக்கிறார்கள். கட்சிகள் என்று சொல்லிக் கொள்ளும் சில கூட்டங்கள் தமது கிளைக் கழகக் கணக்குகளையும், அங்கத்தினர் எண்ணிக்கையையும் பிரமாதமாக விளம்பரப்படுத்தி தங்கள் பலத்தை நிரூபிக்க முயற்சிக்கின்றன. இது தவறான முறை.

இப்படி கட்டுப்பாடின்றி—கணக்கு வழக்கின்றி கண்டவர்களையெல்லாம் அங்கத்தினர்களாக்கி தொகையை பெருக்கிக் காட்டும்போதுதான் கட்சிகளில் ஊழலும், ஒழுங்கீனமும் தலை காட்டத் தொடங்குகின்றன. இந்த ஊழலும் ஒழுங்கீனமும் நாளடைவில் கட்சியையே கபளீகரம் செய்துவிடும். அங்கத்தினர்கள் மிகக் குறைவாக இருப்பினும், ஒழுக்கம், நேர்மை, கட்டுப்பாடு, செயலாற்றும் பண்பு ஆகிய குணங்கள் படைத்தவர்களைப் பெற்றிருக்கும் கட்சியே உண்மையான பலமுடையதாகும். அக்கட்சிதான் ஒழுங்கான முறையில் மக்களுக்கு சேவை செய்யும் சக்தியுடையதாக இருக்கும்.

தில் குதிக்கும் தமிழன் வெற்றியையன்றி பிறிதொன்றும் காணமாட்டான். ஆனால், பொறுப்பற்று கோஷங்களை எழுப்பி தேவையின்றி கலவரத்தை விளைவிப்பது தமிழரின் இயல்பேயல்ல.

திரு. ம. பொ. சியின் தலைமையிலுள்ள தமிழரசுக் கழகம் தேர்தலில் நிபந்தனையின்றி காங்கிரசுடன் ஒத்துழைப்பதின் காரணமும் இதுதான். தேர்தலுக்குப் பின்னர் காங்கிரஸ் மொழிவாரி மாகாணப் பிரிவினையை அமுல் நடத்தத் தயங்கினால் அப்பொழுது ஒரு போராட்டத்தில் இறங்க தமிழரசுக் கழகம் தயங்காது.

சுவாமி சீதாராம் அவசரப்பட்டு தேர்தல் காலத்தில் சத்தியாக்கிரகம் செய்வதை தள்ளிப்போட்டு காங்கிரசுடன் ஒத்துழைத்து தேர்தலுக்குப் பின் வேண்டுமானால் மொழிவாரி மாகாணத்துக்காக சத்தியாக்கிரகம்செய்ய முற்பட்டால் அப்பொழுது தமிழரசுக் கழகமும் ஒருவேளை தனது ஆதரவை அவருக்கு அளிக்க முற்படாலாம். அதைவிட்டு ஆத்திரமோ அவசரமோ படுவதில் பயனில்லை.

காங்கிரஸ் மகாசபையும், நேருவும், தேர்தல் பிரகடனத்தில் குறிப்பிட்டுள்ள மொழிவாரி மாகாணப் பிரச்னை சம்பந்தமாக ஒரு நம்பிக்கையான சூழ்நிலையை உண்டாக்க முயல வேண்டும். தேர்தலுக்குப் பின் கால தாமதமின்றி இந்தியாவை மொழிவாரியாக பிரிப்பதற்கான முயற்சிகளில் ஓரளவு இப்பொழுதே ஈடுபட வேண்டும். அப்பொழுதுதான் இந்தியாவின் தேசிய இன நாடுகள் அத்தனையும் கட்டுக் கோப்புடன் ஒத்துழைத்து காங்கிரஸை வெற்றிப் பாதைக்கு அழைத்தவரும்.

● செங்கோல்

சந்தா விவரம்

தனிப் பிரதி	0	1	0
ஆண்டு சந்தா	3	0	0

நாடக விமர்சனம்:

ஜீவன்

பூங்கா நகர் தமிழரசுக் கழக நிதிக்காக ஏ. ஆர். டி. நாடக சபையார் 'ஜீவன்' என்ற சுவை மிக்க நாடகத்தை, 27-12-51 இரவு சென்னை ஒற்றைவாடை தியேட்டரில் சிறப்பாக நடத்தினர். நாடகத்திற்கு பன்மொழிப் புலவர் தெ. பொ. மீனாட்சிசுந்தரனார் தலைமை தாங்கினார்.

'ஜீவன்' சாதிக் கொடுமையை சித்தரிக்கும் அருமையான நாடகம். பணக்காரக் குடும்பங்களில் மறைவாக நடக்கும் ஊழல்கள் நாடகத்தில் சுவையுடன் விளக்கப்படுகின்றன. கதாநாயகர்கள் இறுதியில் லட்சியத்துக்காக உயிர் விடுகின்றனர். சோக இசையுடன் நாடகம் முடிகிறது.

நாடகத்தில் இடை இடையே அமைந்திருந்த பிரச்சாரக் காட்சிகள் மக்களின் ஏகோபித்த பாராட்டுதலைப் பெற்றன. தமிழ் நாட்டு போலி அரசியல் வாதிகளில் சிலர் நடத்தும் 'நாமத்தை நக்கும்' லட்சியத்தை(!) நாடகக் குழுவினர் நகைச்சுவைத் ததும்ப சித்தரித்துக் காட்டியது மிக நன்றாக இருந்தது.

''வோட்டுப் பாட்டு'' என்ற ஒரு காட்சியில், ஒரு கிராமியக் காதல் ஜோடி தங்களிடம் ஓட்டுக் கேட்க வந்த அ[illegible] விரட்டிவிட்டு காங்கிரஸ் கட்சிக்கு வலிய சென்று ஓட்டளிக்கின்றனர். இந்த காட்சிக்காக அமைக்கப்பட்டிருந்த பாடல் இனிமையாகவும், கருத்தமைந்ததாகவும் இருந்தது.

நாடகத்தில் பங்கு கொண்டவர்கள் பெரும்பாலும் நாடக மேடைக்கு புதிதானவர்கள் என்றாலும் திறம்பட நடித்தனர். குறிப்பாக ஏ ஆர். டி. அரசு, தர்மலிங்கம், வேதாசலம், இரா. பக்தவத்சலம், தங்கவேலன், பசுபதி ஆகியோரும், பிரேமா, பங்கஜவல்லி என்ற நடிகைகளும் பாராட்டத்தக்க விதத்தில் நடித்தனர்.

நடிகர்களுக்கு பயிற்சியளித்த திரு. ஜெ. வி. ராகவன் இந்நாடகத்தில் நல்ல வெற்றியைக் கண்டிருக்கிறார். திரு. ஜெகன்னாதன் இயற்றிய பாடல்கள் நாடகத்துக்கு சோபையளித்தன.

நாடக சபாவின் உரிமையாளரான திரு. ஏ. ஆர். திருநாவுக்கரசு கதை-வசனத்தை போற்றத்தக்க முறையில் அமைத்திருக்கிறார். எளிய உரையாடல்களில் தமிழரசுக் கழகப் பிரச்சாரத்தை பல இடங்களில் அருமையாகக் கையாண்டிருக்கிறார்.

நாடக முடிவில் திரு. தெ. பொ. மீனாட்சிசுந்தரனார் நாடகத்தையும், நடிகர்களையும் பாராட்டிப் பேசினார்.

காங்கிரசைக் கலைப்பதா?

அரசியல் சுதந்திரம் பெற்ற பிறகு காங்கிரஸ் கட்சி கலைந்து போவதா? முக்காலுமில்லை. அதற்கு மாறாக இந்தக் கட்சி அதிகாரத்தையும், நிர்வாகப் பொறுப்பையும் ஏற்றுக்கொண்டு தன்னுடைய நிர்மாண வேலைத் திட்டத்தை நடைமுறையில் கொண்டுவர வேண்டும். அப்பொழுதுதான் காங்கிரஸ் கட்சி தன்னுடைய ஸ்தானத்தை கௌரவமாக வகித்தது போலாகும். அப்படிக்கின்றி, இந்தக் கட்சி பலவந்தமாக கலைக்கப்பட்டு விடுமானால் குழப்பந்தான் உண்டாகும். ஐரோப்பிய மகா யுத்தத்துக்குப் பிறகு ஒழுங்கான முன்னேற்றத்தைக் கண்டுள்ள எல்லா நாடுகளிலும், எந்தக் கட்சியானது அதிகாரத்தைக் கைப்பற்றியதோ அந்தக் கட்சிதான் தேசிய புனருத்தாரண வேலையிலும் ஈடுபட்டிருக்கிறது.

— நேதாஜி சுபாஷ் சந்திர போஸ்,
ஹரிபுரா காங்கிரஸ் தலைமை சொற்பொழிவு (19-2-38).

தேர்தல் களத்தில் ம. பொ. சி.

பொதுத் தேர்தலில் காங்கிரஸ் அபேட்சகர்களை ஆதரிக்கும் பொருட்டு மாநில தமிழரசுக் கழகத் தலைவர் ம. பொ. சி. கடந்த டிசம்பர் 27-ம் தேதி முதல் 31-ம் தேதி வரை தென்னாற்காடு, மதுரை, ராமநாதபுரம் ஆகிய மாவட்டங்களில் சுற்றுப் பிரயாணம் செய்து காங்கிரஸ் தேர்தல் பிரச்சாரக் கூட்டங்களில் சொற்பொழிவாற்றினர். விபரம் வருமாறு:—

தென்னாற்காடு

ஜனவரி 27—ம் தேதி மாலை 6 மணிக்கு கடலூரிலும் இரவு 8 மணிக்கு நெல்லிக் குப்பத்திலும் 9-மணிக்கு பண்ருட்டியிலும் நடைபெற்ற பொதுக் கூட்டங்களில் பேசினர்.

28-ம் தேதி காலை 10—மணிக்கு திண்டிவனத்திலும், மாலை 6 மணிக்கு வளவானூரிலும் இரவு 8 மணிக்கு கெடார் தொகுதியிலும் நடைபெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டங்களில் சொற்பொழிவாற்றினர்.

மதுரை— ராமநாதபுரம்

டிசம்பர் 28-ம் தேதி இரவு விழுப்புரத்திலிருந்து புறப்பட்டு 29-ம் தேதி காலை திரு. ம. பொ. சி. மதுரை வந்து சேர்ந்தார். மதுரை தமிழரசுக் கழக ஊழியர்களும் மற்றும் காங்கிரஸ்காரர்களும் தலைவர் ம. பொ. சி. யை ஸ்டேஷனில் வரவேற்றனர். பிற்பகல் வரை மதுரையில் தங்கியிருந்த பின்னர் அங்கிருந்து புறப்பட்டு சாத்தூர் சென்று அங்கு மாலை 6 மணிக்கு நடைபெற்ற மிகப் பிரம்மாண்டமான பொதுக் கூட்டத்தில் பேசினர். பின்னர் இரவு 7 மணிக்கு சிவகாசியிலும் 9 மணிக்கு விருதுநகரிலும் நடைபெற்ற பொதுக் கூட்டங்களில் பேசிவிட்டு அன்றிரவே மதுரை திரும்பிவிட்டார்.

மதுரை

29-ம் தேதி காலை 10-மணிக்கு உரங்கான் பட்டி தமிழரசுக் கழக தோழர்கள் கூட்டிய கூட்டத்திலும் 11-மணிக்கு மேலூர் தேர்தல் பிரச்சாரக் கூட்டத்திலும் பேசினர். அன்று பிற்பகல் மூன்று மணிக்கு (சாத்தூர் செல்லும் வழியில்) திருமங்கலத்தில் நடைபெற்ற பொதுக் கூட்டத்திலும் மறு நாள் (30-ம் தேதி) காலை மதுரை நகரில் நடைபெற்ற பொதுக் கூட்டத்திலும், அன்றிரவு திலகர் சதுக்கத்தில் நடைபெற்ற சுமார் 1-லட்சம் பொது மக்கள் அடங்கிய மாபெரும் பொதுக் கூட்டத்தில் காங்கிரஸ் அபேட்சகர்களை ஆதரிக்க வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தி பேசினர்.

31-ம் தேதி மாலை 6—மணிக்கு (காரைக்குடி தொகுதியில்) கண்டனூரிலும் இரவு 7-மணிக்கு தேவக் கோட்டையிலும், 8—மணிக்கு காரைக்குடி நகரிலும் நடைபெற்ற பொதுக் கூட்டங்களில் காங்கிரசுக்கே ஓட்டளிக்குமாறு வாக்காளர்களைக் கேட்டுக் கொண்டார்.

சேலம்

ஜனவரி 2-ம் தேதி காலை 10 மணிக்கு கிருஷ்ணகிரி தாரா டாக்கிஸிலும், பிற்பகல் 2 மணிக்கு காவேரிப்பட்டினம் சினிமாக் கொட்டகையிலும் மாலை 5 மணிக்கு பொம்மிடியிலும் இரவு 7-மணிக்கு ஊத்தங்கரையிலும் நடைபெற்ற பொதுக் கூட்டங்களில் ம. பொ. சி. பேசினர்.

முசிறி: (மேட்டுப்பாளையம்) இவ்வூரில் 23-12-51ல் தமிழரசுக் கிளைக் கழகம் துவக்கப்பட்டது. திரு. ஆர். குழந்தைவேலு எம்.ஏ., கழகத்தைத் திறந்து வைத்தார். திருவாளர்கள்; முத்தையா, வீரப்பன் ஆகியோர் பேசினர். கீழ்க்கண்ட செயற்குழு அமைக்கப்பட்டது. தலைவர்: திரு. இரா. சீனிவாசன்; துணைத் தலைவர்: திரு. மு. மாரிமுத்து; செயலாளர்: திரு. இர. மாணிக்கம்; துணைச் செயலாளர்: திரு. கா. பாலவெங்கடராமன்; பொருட் காப்பாளர்: திரு. சுர. முத்துநாராயணன்.

கல்லிடைக்குறிச்சி: இவ்வூர் கேரு படிப்பக உறுப்பினர்கள் கூட்டம் 30-12-51-ல் நடைபெற்ற போது தேர்தலில் இத்தொகுதியில் நிற்கும் காங்கிரஸ் அபேட்சகர்களை ஆதரிப்பதென முடிவு செய்து தள்ளனர்.

திரு. தங்கமணிக்கு ம. பொ. சி. பதில்

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மதுரை நகரக் கமிட்டி காரியதரிசி திரு. கே. டி. கே. தங்கமணி பத்திரிகைக்கு விடுத்துள்ளதாகக் கூறப்படும் அறிக்கை யென்று 1-1-52 'விடுதலை' யில் பிரசுரமாகி இருப்பதைக் கண்ணுற்றேன்.

சமீபத்தில் ஐதாராபாத்தில் கொலையுண்ட 'குப்தா' என்ற மத்திய பார்லிமெண்ட் அங்கத்தினரை கம்யூனிஸ்ட்கள் சுட்டுக் கொன்றார்கள் என்று நான் 30-12-51 ல் மதுரைக் கூட்டத்தில் பேசியதாக திரு. தங்கமணி தமது அறிக்கையில் குறிப்பிட்டிருக்கிறார். திரு. 'குப்தா' அராஜகவாதிகளால் கொல்லப் பட்டிருக்கலாம் என்ற ஐயத்தை வெளியிட்டேனே ஒழிய கம்யூனிஸ்ட்டுகள் மீது நான் பழி சுமத்தவில்லை.

ம. பொ. சிவஞானம்

2—1—52.

பொன்னாடு

(வார வெளியீடு)

தைத்திங்கள் முதல் நாள் வெளிவரும்.

விலை 0—2—0

முன்பணம் கட்டக்கூடிய ஏஜண்டுகள் விண்ணப்பிக்கவும்.

விபரங்களுக்கு:

K. C. நடராஜ சுந்தரன்,
33, கந்தப்ப செட்டி தெரு,
G. T., சென்னை-1.

mapsi.in

கேளுங்கள், கேளுங்கள்!

ராமநாதன் (திருச்சி).

திராவிட இயக்கத்தை எந்த பெயரால் அழைத்தால் பொருத்தமாக இருக்கும்?

தலைவர் ம. பொ. சி., மவிந இனத்தில் பிறந்த பச்சோந்திகள் என்று கூறுகிறார். கண்ணிருக்கும் படுகுழியில் விழுந்துகொண்டிருப்பதால் அவர்களை திராவிடக் குபோதிகள் என்று அழைக்கலாம், வேண்டுமானால் 'குத்தூசி' கூறுவது போல தில்லுமுல்லுக் காரர்கள் என்று பெயரிட்டுவிடலாமே...

ரங்கசாமி (கோவை).

நாட்டில் உணவுப் பிரச்னை போன்ற முக்கிய விஷயங்கள் கவனிப்பதற்கு இருக்க, தமிழரசுக் கழகம், திராவிட இயக்கத்தை கண்டிப்பதையே தொழிலாகக் கொண்டிருக்கிறதே. இது சரியா?

தொழிலாகக் கொண்டிருப்பதாகக் கூறுவது புரியாத்தனம். தொழில்களில் ஒன்ருகக் கொண்டிருக்கிறது. வயலில் பயிரிடுவதற்கு முன்னல் களையை கொத்தி எறிந்துதானே ஆகவேண்டும்....

கோவிந்தசாமி (மன்னார்குடி).

கம்யூனிஸ்ட் கட்சியினர் சமீப காலமாக சோஷலிஸ்டுகளை தங்களுடன் ஐக்கிய முன்னணியில் சேரும்படி வருந்தி வருந்தி அழைக்கிருர்களே! திராவிடக் கழக கட்பு துண்டிக்கப் பட்டு விட்டதா?

இது ஒரு ரகமான புரட்சி என்று வைத்துக் கொண்டால் போகிறது! அதுசரி... திராவிடக் கழகத்துடன் கம்யூனிஸ்டுகள் நட்பு கொண்டிருக்கிறார்களா?

குமரேசன் (ஆலங்குடி)

நான் தமிழரசுக் கழகத்தில் அங்கத்தினனுக சேர விரும்புகிறேன்: அதற்கு ஏதாவது தகுதிகள் இருக்க வேண்டுமா?

"நான் தமிழன், என் மொழி தமிழ், என் நாடு தமிழ்நாடு" என்ற நினைவு மறக்காத தமிழன் தாராளமாக தமிழரசுக் கழகத்தில் சேரலாம். தமிழ்நாட்டைச் சேராத திராவிடர்களுக்கு நிச்சயம் கழகத்தில் இடம் கிடையாது.

பூங்காவனம், (சென்னை)

தமிழரசுக் கழக லட்சியம் மொழி வாரி மாகாண அடிப்படையில் பிரிக்கப்படும் தமிழ் நாடா? இன வாரியாக பிரிக்கப்படும் சுதந்திரத் தமிழகமா?

தேசிய இன அடிப்படையில் அமைக்கப்படும் சோஸலிசத் தமிழகந்தான் தமிழரசுக் கழக லட்சியம், இந்த லட்சியத்தை அடையும் முதற்படி மொழிவாரி மாகாணம்.

தாமஸ் (மைலாப்பூர்)

ஒரு அரசியல் வாதிக்கு பேச்சுத் திறனும், செயலாற்றும் பண்பும் மட்டும் இருந்தால் போதுமல்லவா?

அத்துடன் ஒழுக்கம் நிறைந்த மனப்பண்பும் வேண்டும்.

'செங்கோல்' நன்கொடை

கள்ளக்குறிச்சி தமிழரசுக் கழக செயலாளர் திரு. கி. ஜனார்த்தனம் தன் துணைவியார் பெண் மகவு பெற்றதை அறிவித்து, செங்கோல் வளர்ச்சிக்கென ரூ. 3 நன்கொடை அளித்துள்ளார் குழந்தைக்கு தலைவர் திரு ம. பொ. சி. யால் மணிமேகலை என்ற பெயர் சூட்டப்பட்டது.

இலங்கையில்

சேரல் ஏஜண்ட்:

எஸ். நாராயணன்,
நியூஸ் ஏஜெண்ட் & புக் ஸ்டால்,
நெ. 7, ராம்சே ரோட்,
கொழும்பு-2

காஞ்சீபுரம்:

குமார் டிரேடர்ஸ்,
நியூஸ் & கமிஷன் ஏஜண்ட்ஸ்,
378, காந்தி ரோட், காஞ்சீபுரம்.

செங்கோல்

விளம்பர விகிதம்

ஒரு பக்கம்	... ரூ.	50 0 0
அரைப்பக்கம்	... ,,	30 0 0
ஒரு காலம்	... ,,	15 0 0
ஒரு காலம் ஒரு அங்குலம்....	,,	2 0 0

"தமிழ் முழக்கம்"

(மாதம் இருமுறை)

ஆசிரியர்: கவி கா. மு. ஷெரீப்

(பொதுச் செயலாளர்: மாநில தமிழரசுக் கழகம்)

பொங்கல் புதுநாளில் வெளி வருகிறது

விலை இரண்டு அணு

ஏஜண்டுகள் தேவை

"தமிழ் முழக்கம்" சென்னை—14.

ஆசிரியரும் வெளியிடுபவரும்: ஆ. கொ. வேங்கடராமஜுஜன்; அச்சிட்டது: கண்ணகி அச்சகம், 1/29, இருசப்ப கிராமணி தெரு, திருவல்லிக்கேணி, சென்னை-5.